International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 06 Issue: 04 October to December 2024 www.irjtsjournal.org

# திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் எனும் ஈழத்துச் சிதம்ரபர புராணத்தில் சமுதாய விழுமியங்கள்

செல்வி.பேரானந்தம்துஹாயா.

*விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,*

*இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம். இலங்கை.*

**ஆய்வுச் சுருக்கம்**

*ஈழத்தில் ஆங்கிலேயரது ஆட்சிக்காலம் முடிவுற்றதும் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே தேசிய எழுச்சிக்காலம் உதயமாகியது. குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டுக்குரிய சமய இலக்கியங்களை நோக்கும் போது இலங்கையின் சிவாலயங்கள் மீது தோற்றம்பெற்ற சைவத்தலபுராணங்கள் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் திருக்கேதீச்சர புராணம்,நகுலாசல புராணம்,நல்லூர் ஸ்ரீ கைலாசநாதர்தலம், திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் எனப்படும் ஈழத்துச்சிதம்பர புராணம் என்பவை இக்காலத்திற்குரிய தலபுராணங்களாகும். இத்தலங்கள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களின் சமுதாயக் கூறுகளின் அடிப்படையில் சைவம்சார்ந்த பண்பாட்டினை பிரதிபலித்துக் காட்டுவனவாக மேற்குறித்த தலங்களின் மீதுசைவத் தலபுராணங்கள் தோற்றம் பெற்றன. இச்சைவத் தலபுராணங்களானவை வெறுமனே சமயபக்தி இலக்கியம் என்பதனைத் தாண்டிசமூகப்பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டவையாக விளங்குகின்றன. மகளிரைப் போற்றும்பண்பாடு, அறவியல் பண்பாடு போன்ற பல்வேறு சமூகக் கூறுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. அந்தவகையில் இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டிற் காரைநகரில் திண்ணபுரம் எனும் பிரிவிலுள்ள ஈழத்துச்சிதம்பரத்தில் கோயில் கொண்டருளிய சிவபிரான் மீது பாடப்பெற்றதே திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச்சிதம்பர புராணமாகும். இத்தல புராணத்தை புலவர் மணி இளமுருகனார் (1908-1975) இயற்றியுள்ளார். விழுமியம் என்பதை பொதுவாக அறம், ஒழுக்கம், நெறி என்று கருதுவர்.இப்புராணமானது கொண்டுள்ள சமுதாயப் பண்பாட்டிலே மக்கள் வாழ்வியல் கடைப்பிடித்தொழுக வேண்டிய விழுமியப்பண்பாட்டினை தன்னகத்தே கொண்டுள்ளமை சிறப்பிற்குரியதாகும். இப்புராணமானது விருந்தோம்பல் முறை, சத்தியம், தர்மம், ஒழுக்கவியல் என்பனவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனாலும் இன்று சமூக விழுமியங்களானவை சமூகத்தின் மத்தியில் மெல்ல அருகிக் கொண்டே செல்கின்றது. ஆகவே ஈழத்துச்சிதம்பர புராணத்திலுள்ள சமூகவிழுமியங்களைவெளிக்கொணரலே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வானது விபரண ஆய்வு முறையியல், வரலாற்றாய்வு முறையியல் மற்றும் ஒப்பீட்டாய்வு முறையியலை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட இருக்கின்றது.*

***திறவுச்சொற்கள் :*** *திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம், தலபுராணம்,ஈழம், சமூகம், விழுமியம்.*

**முன்னுரை**

ஒரு நாட்டின் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்திக் காட்டும் வரலாற்று மூலங்களாகத் திகழ்பவை இலக்கியங்களாகும். சைவப்பண்பாட்டை வளம்படுத்தியுள்ள வரலாற்று மூலங்களுள் தலபுராணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்புராணங்கள் இந்துப்பண்பாட்டின் கருவூலமாகப் போற்றப்படும் சிறப்பினையுடையன. இந்து இலக்கியமரபில் அவற்றிற்குத் தனிச்சிறப்புண்டு. தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் இந்து ஆலயங்களை மையமாகக் கொண்டு பல தலபுராணங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

ஈழத்தில் பெரும்பாலான தலபுராணங்களானவ சிவாலயங்களை மையமாகக் கொண்டே எழுந்தவை ஆகும்.இச் சைவத் தலபுராணங்கள் மூர்த்தி,தல, தீர்த்தச் சிறப்புக்களோடு,சமயவரலாறு, தெய்வீக வரலாறுகள்,

தத்துவம், கலைமரபு, அறிவியல் போன்ற திருக்கோயில் பண்பாட்டு மரபுகளின் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்திக் காட்டுவதோடு சைவசமூகத்தின் சமூகவாழ்வியல் அம்சங்களின் பறைசாற்றி நிற்கின்றன.

ஈழத்தில் கி.பி 14ஆம் நூற்றாண்டிலிருந்து (ஆரியச்சக்கரவர்த்திகள்காலம்) 20ஆம் நூற்றாண்டுவரை சைவம் சார்ந்த தலபுராணங்களே அதிகம் தோற்றம் பெற்றன. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்துக்குப் பின்னர் கி.பி 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளிலேயே தலபுராணங்கள் பெருவளர்ச்சி அடைந்தமை அறியப்படுகின்றது.குறிப்பாக 20ஆம் நூற்றாண்டிலேயே அதிகமான தலபுராணங்கள் ஈழத்தில் எழுந்துள்ளன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. இக்காலம் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே ' தேசிய எழுச்சிக் காலம்'' எனப்பட்டது.

தேசிய எழுச்சிக் காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் சமயம்,சமூகம், தேசியம் போன்ற பல்வேறு கருப்பொருள்களைக் கொண்டனவாக விளங்கின. தேசிய எழுச்சிக்காலத்திற் குறிப்பாக 20ஆம் நூற்றாண்டுக்குரியசமய இலக்கியங்களை நோக்கும்போது ஈழத்துச் சிவாலயங்கள் மீது தலபுராணங்களும் தோன்றியுள்ளமையை அவதானிக்கலாம். அந்தவகையில் திருக்கேதீஸ்வரத்தின் மீது பாடப்பெற்ற இரு திருக்கேதீச்சர புராணங்களும் 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவை என்பது நோக்கத்தக்கது. மேலும் நல்லூர் ஸ்ரீ கைலாசநாதபுராணம், திருத்திண்ணபுர சுந்தரேஸ்வர புராணம் எனும் ஈழத்துச்சிதம்பர புராணம், நகுலாசல புராணம் போன்றனவும் இக்காலத்திற்கு உரிய தலபுராணங்களாக விளங்குகின்றன. சிவாலயங்கள் மீதுமட்டுமின்றி ஏனைய ஆலயங்கள் மீதும் தலபுராணங்கள் எழுந்துள்ளன.

ஈழத்தின் கண் விளங்கும் சிவன் ஆலயங்களின் வரலாறுகளும்,சிறப்புக்களும் சமய சமூகபாரம்பரியத்துடன் இணைந்து விளங்குபவை. அந்தவகையில் ஈழத்தின் காரைநகர் சிவன் மீது பாடப்பெற்றதே திருத்திண்ணபுர சுந்தரேஸ்வரர் புராணம் எனும் ஈழத்துச் சிதம்பர புராணமாகும். ஏனைய புராணங்கள்போல இப்புராணமும் சைவசமயம் சார்ந்த பண்பாட்டைப் பிரதிபலித்துக் காட்டும்போது சமுதாயக் கூறுகளினையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. ஒருசமுதாயம் ஒழுக்கவியலுடன்கூடிய சமுதாயமாக அமைய வேண்டுமெனில் அறவியற் பண்பாடும் மிகஅவசியமாகின்றது. அறவியலில் மனித விழுமியச் சிந்தனைகள் குறிப்பிடத்தக்கது. மனிதர்கள் தனிவாழ்விலும், சமூகவாழ்விலும் மிருகத்தன்மை நீங்கி மனிதத்தன்மைகளுடன் வையத்துள் வாழ்வாங்கு வாழத் துணைநிற்பதுவிழுமியங்கள் ஆகும்.

## திருதிண்ணபுரச்சுந்தரேசர் புராணம் எனும் ஈழத்துச்சிதம்பரபுராணம் அறிமுகம்

சித்த புருஷர்களில் மூலவராகிய திருமூலரால் 'சிவபூமி' என போற்றப்பட்ட ஈழத்தில் சிவசம்பந்தமுடைய நெறியாகிய சைவம் மக்களுடைய வாழ்வியல் நெறியாக இருந்துவருகின்றது. ஈழத்தில் சைவம்சார் சிவன் ஆலயங்களினை மையமாகக் கொண்டு பல தலபுராணங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இத்தலபுராணங்கள் அத்தல இறைவனின் பெருமைகளை மையப்படுத்தி அச்சூழலில் வாழும் மக்களின் சமய,சமூகப் பண்பாட்டு வரலாற்றையும் விரித்துரைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. ஈழத்தில் தோற்றம் பெற்ற முக்கியமான தலபுராணங்களில் ஒன்றாக திருத்திண்ணபுரச் சுந்தரேசா் புராணம் திகழ்கின்றது.

ஈழத்தின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணக்குடாநாட்டிற் காரைநகா் என இன்று வழங்கும் காரைதீவில் திண்ணபுரம் என்னும் பிரிவில் உள்ள சௌந்தராம்பிகை சமேதசுந்தரேஸ்வரர் மீதுபாடப்பட்டதே திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் எனும் ஈழத்துச் சிதம்பர புராணமாகும்.

தலபுராணங்கள் பெரும்பாலும் மொழிபெயர்ப்புகளாகவே விளங்குக, அதற்கு மாறாக திருத்திண்ணபுரச் சுந்தரேசா் புராணமானது மொழிபெயர்ப்பாக இல்லாத உரைநடை நூல் வழிவந்த செய்யுள் நூலாக அமைந்து காணப்படுவது சிறப்பானதாகும். திருவுத்தரவுதரகோச மங்கையிலிருந்து காரைநகருக்கு முதன் முதல் வந்த மங்களேஸ்வர குருக்களும் அவர் பரம்பரையினரும் ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்த வரலாறுகளையும் கர்ண பரம்பரைக் கதைகளையும் ஒன்றுசேர்த்து 'ஈழத்துச் சிதம்பரம' எனும் உரைநடை நூலை கணபதீஸ்வரக்குருக்கள்


© 2024, IRJTSR

எழுதியுள்ளார்.கணபதீஸ்வரக்குருக்கள் எழுதிய ஈழத்துச் சிதம்பரம் எனும் இவ்வுரைநடை நூலே திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் எனும் ஈழத்துச் சிதம்பரபுராணம் விரிந்த நூலுக்கு மூலமாகிறது.இத்தலபுராணத்தை இயற்றியவர்ஈழத்துக் கவிஞரான நவாலியம்பதி புலவர்மணி இளமுருகனார் (1908-1975) ஆவார் (**சுகந்தினி**.,சி,**2020:66-67**).

**புராண உட்கட்டமைப்பு**

இப்புராணமானது பாயிரச் சருக்கம், காரைவளச்சருக்கம், திண்ணபுரச்சருக்கம், தவம்புரிசருக்கம், ஐயனார் கோயில்காண்சருக்கம், சுந்தரேசா் கோயில்காண் சருக்கம், சோமாற்கந்தச்சருக்கம், திருக்கோயிற் பாதுகாவலா்சருக்கம்,அந்தணர் பூசைபுரி சருக்கம், விழாவயர்சருக்கம் என பத்து சருக்கங்களையும் எண்ணூற்றாறு (806)பாடல்களையும் கொண்டதாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

**சமூக விழுமியம் என்பதன் பொருள் விளக்கம்**

விழுமியம் என்ற சொற்பதத்தினை அறம்,தர்மம், ஒழுக்கம், நீதி, நெறி என்று சுட்டுவர். இச் சொற்கள் ஒரே பொருளைச் குறிப்பனவேயாகும். இவை மிகச்சிறந்த பண்பாட்டு விழுமியங்களாக கொள்ளப்படுகின்றன.சமூகம் என்பது அனைத்து உறவுகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு அமைப்பாகும். ஒரு சமூக வளர்ச்சியிலே அச்சமூகம் சார் மக்களால் கடைப்பிடிக்கப்படும் விழுமியங்கள் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன.

> **“ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும், செயல்களுக்கும், நடத்தை முறைகளுக்கும் எவை எவை அவசியமென்று கருதப்படுகின்றனவோ அவை அப்பண்பாட்டினரின் விழுமியங்களாகும்.” (பக்தவற்சல பாரதி.,2003:159)**

ஒரு சமூகத்தின் ஒருமைப்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், விருத்திக்கும் வழிகாட்டியாகவும்,நெறிப்படுத்துவதாகவும் அமைகின்ற விழுமியங்கள் சமூக விழுமியங்கள்எனப்படும். சமூக ஒற்றுமை, சமூகநலன் பற்றிய உணர்வு நீதிக்கான செயற்பாடு, பொறுப்புணர்வுடன் செயலாற்றல் என்பன இது சார்ந்த விழுமியங்களில் சிலவாகும்(**பிலேந்திரன்.ஞா**.,**1996 :48**).

அன்பு, பெரியோரை மதித்தல்,சகோதரத்துவம், பகிர்ந்து உண்ணல், உண்மைபேசுதல்,நடுவுநிலை, நன்றிமறவாமை,ஒற்றுமை,கொடை, இன்சொல் பேசுதல், விட்டுக்கொடுத்தல் முதலானவை மிகச்சிறந்தவிழுமியங்களாகக் காணப்படுகின்றன.

**கல்வி**

சமுதாயத்திலே விழுமிய மாற்றம் வாழ்வின் வளர்ச்சியை சுட்டி நிற்கின்றதாகிய மாற்றத்தை அடைய வேண்டும்.இவ்வாறாக விழுமிய மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளுள் கல்வி முக்கியமானது. கல்வியுடன் குறிப்பிட வேண்டிய மற்றைய காரணி குடும்பமாகும்.

ஒரு சமூகத்தின் அச்சாணியாகவும் ஒருவரின் குணப்பண்பினை விருத்தி செய்வதாகவும் விளங்குவது கல்வியாகும். இதுவே சமூகத்தின் உச்சபட்ச வளர்ச்சியும் ஆகும். அறவியலும், விழுமிய வளர்ச்சியுமே கல்வியின் முக்கிய பணிகளாகும். (**பிலேந்திரன்,ஞா**.,**1996 :45**)

கல்வியும் சமயமும் ஒரு சமூகத்தின் விழுமியங்களையும் நன்னெறியையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன. சைவப்புராணமாகிய ஈழத்துச் சிதம்பரபுராணத்தில் கல்வி பற்றிய சிந்தனைகள் வெளிப்பட்டு நிற்கக்காணலாம்.

காரைநகரிர் ஆடவருக்கென இரு கல்லூரிகளும், மகளிருக்கென ஒரு கல்லூரியும் அமைக்கப்பட்டுள்ளன என ஈழத்துச் சிதம்பரபுராணம் கூறுகின்றது(**காரைவளச் சருக்கம் : 126).** இம்மக்கள் தீய ஒழுக்கங்களைப் போக்கி நல்லொழுக்கங்களை வளர்க்கின்ற சைவத் தமிழ்ப் பாடசாலைகளை அமைத்து,அவற்றுக்கு சமய குரவர்களின்

திருநாமங்களைச் சூட்டி, பிள்ளைகள்சைவநெறிப்படி ஒழுகவும்தேவார திருவாசங்களை படிக்கவும் செய்தமையால் காரை நகரில் சைவம் தழைத்தோங்கியுள்ளது.

**"சிவநெறிக்குக் காப்பானார் இருமூவர் திருநாமஞ் சிறப்புற்று ஓங்க**
**அவநெறிகள் விலக்கு தமிழக் கழகங்கள் அவர் பெயரால் அமைந்ததாலே"..**

**(காரைவளச்சருக்கம்:09)**

**அறநெறிப்பாடசாலைகள்**

விழுமியப்பண்புகளை இளைய தலைமுறையினா் மத்தியில் மீளுருவாக்கம் செய்வதில் அறநெறிப்பாடசாலைகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கவை. காரையூா் மக்கள் மணிவாசகா் சபை ஒன்றை உருவாக்கி சைவ நூல்களை வெளியிட்டும், சைவ சமயப் பாட வகுப்புக்களை நடாத்தியும், அவ்வகுப்புக்களிற் சித்தியடைந்த மாணவா்களுக்கு பரிசில்களும் வழங்கி வந்துள்ளமை ஈழத்துச் சிதம்பர புராணம் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**" ..கற்றறிந்தாா் வாழ் காரை நகரின் மாணிக்கவாசகப் பேர்க்கழகம் தோன்றி**
**உற்ற சிவ நெறிப் பனுவல் வெளியிட்டும் பாடங்கள் ஓதுவித்தும்**
**அறிவிற் தோ்ச்சி பெறும் மாணிகட்கு பரிசு அளித்தும் நன்றேவரும்"**

**(விழாவயா்சருக்கம்:82)**

**குடும்பம்**

மனித சமுதாயத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாக குடும்பம் திகழ்கின்றது. பண்டைய இந்து சமுதாயத்தில் குடும்பங்கள் ஒன்று கூடி வாழும் கூட்டு குடும்பம் முறையை காணப்பட்டது. இத்தகைய சுற்றம் பேணும் தன்மையைஈழத்துச் சிதம்பர புராணத்தில் காணமுடிகின்றது.

**" விழுது எனச் சுற்றம் தாங்கும் மேன்மையாம் குணத்தின் மிகு**
**........ தொன்முறை வாழும் அவ்வூா்"** **(காரைவளச் சருக்கம்: 14)**

ஆலமரத்தின் விழுதுகள் கிளைகளைத் தாங்குவது போலத் தமது உறவினர்களை காரைதீவு மக்கள் பாதுகாக்கின்ற குணத்தை உடையவர்களாக விளங்கினர்.

இந்துக்களின் வாழ்வியல் நெறியாகிய ஆச்சிரமதர்ம நெறியில் இல்லறவியல் சிறப்பானதாகும்.

**" நல்லறங்கள் பலவற்றுள் தலை சிறந்தது**
**என்று மறை நவின்றவாற்றான்"**

**(ஐய்யனாா் கோயில்காண் சருக்கம்:22)**

நல்ல தருமங்கள் பலவற்றுள்ளும் இல்லறமே மிகச் சிறந்தது என்று வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதால், இல்லறவியலில் தர்மங்களினை குறைவின்றி செய்து சிறப்பாக வாழ வேண்டும் எனதிருத்திண்ணபுரச் சுந்தரேஸ்வரர் புராணம் இயம்பியுள்ளது.

**விருந்தோம்பல்**

இல்லறவியலை மேற்கொள்வோா் பின்பற்றப்பட வேண்டி மிகஉசிதமான விழுமியப்பண்பாடான விருந்தோம்பலைப் பற்றியும்ஈழத்துச் சிதம்பர புராணம் வெளிப்படுத்தி நிற்கின்றது. சுமகாலததில் இவ்வுயரிய விழுமியப் பண்பாடு சமூகத்தின் மத்தியில் அருகிக் கொண்டே செல்கின்றமை வருந்தத்தக்கதாகும்.

**"அகம் எலாம் நிறையுமாறு விருந்தினர்க்கு அருத்தி**
**எஞ்சும் புகவு எலாம் கொண்டு வாழும் புண்ணியம்உடையது அவ்வூர்"**

**(காரைவளச் சருக்கம் : 18)**

காரையூா் மாந்தா் விருந்தினரை உபசரித்துவிட்டு, மீதி உணவை உண்டு வாழும் சிறப்பினை உடையவர்கள்.

**திருக்கோயிலில் ஆசாரம் பேணல்**

" ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்ற ஔவையின் முதுமொழிக்கிணங்க மனிதனை மனிதனாக வாழ வைக்க ஆலய வழிபாடானது அவசியமாகின்றது. இவ்வாலயங்கள் வழிபாட்டிடங்களாக மட்டுமன்றி சமூக விழுமியப்பண்புகளையும் இளைய தலைமுறையினருக்கு கையளிப்புச் செய்பவையாக திகழ்கின்றன. இத்திருக்கோயில்கள் தூய்மையான இடங்களாகும். இங்கு சிறிதளவேனும் ஒழுக்க அனுட்டானங்கள் தவறினால் இறையருள் கிடையாது என ஈழத்துச்சிதம்பர புராணம் வலியுறுத்துகின்றது.

**" ..தேசு ஆரும் திருக்கோயில் புனித வைப்பே**
**சிறிதேனும் ஆசாரம் சிதையில்..." (ஐய்யனார் கோயில்காண் சருக்கம்:57)**

**சமய வழிபாடு**

சமய ஆன்மீக வழிபாடானது மனிதர்களிடம் மறைந்துள்ள கொடிய அரக்க குணங்களினை அழித்து தெய்வீகத்தை மலரச் செய்பவையாகும். தனி மனிதன் சமுதாயத்தில் விழுமியப்பண்பு மிக்கவனாக மிளிர்வதற்கு சமய வழிபாடு இன்றியமையாததாகும். ஈழத்துச்சிதம்பர புராணம் சைவர்கள் வழிபாட்டிற்குகந்த காலமாகிய வைகறையில் நித்திரை விட்டெழுந்து, நீராடி மலர்களைக் கொய்து, தேவாரம் பாடி சிவனை நினைத்து வழிபட வேண்டும் என்ற சமய விழுமியப் பண்பினை பின்வரும் பாடலடியால் சுட்டுகிறது.

**" ......ஏன்ற புலரின் போதில் துயில் நீக்கி**
**செவ்வையுற நீராடிச் சீர்மலர்கள் கொய்து**
**சிவன் பாதம் அருச்சித்துத் தேவாரம் பாடி......" (விழாவயர்சருக்கம்:03)**

மிகச்சிறந்த அற விழுமியப் புராணமாகிய கந்தபுராணத்தினை கோவில்களிலும் வீடுகளிலும் எப்போதும் தவறாது ' புராண படனம்' செய்து,ஒழுக்க சீலமிக்கவர்களாக திண்ணபுர மாந்தர் வாழ்ந்தார்கள்.

**" ...கந்தன் மெய்ப்புராண விழுப்பனுவல் தனை அன்பாற் கோவில் தொறும் வீடுதோறும்**
**எப்போதும் படிப்பதும் பயன் உரைப்பாரும் கேட்பாரும் எங்கும் உண்டாம்"**
**(திண்ணபுரச் சருக்கம்:50)**

**சமய வழிபாடு-கூட்டுப்பிரார்த்தனை**

திருக்கோயில்களில் இடம் பெறும் கூட்டுப் பிரார்த்தனைகளானவை சமூகத்தவரை எவ்விதப் பேதமின்றி ஒற்றுமையுடன் இணைத்து வைக்கக் கூடியவையாகும். காரையூரில் திருவடி தாங்கம்மாள் கட்டிவித்த சிவாச்சிரமத்தில் தமிழ் வேதங்களினை இசையுடன் சைவச் சிறுவர்,சிறுமியருடன்பெண்களும் இணைந்து மன ஒருமைப்பாட்டுடன் பாடி கூட்டுப் பிரார்த்தனை மேற்கொள்வார்கள்.

**" சேயிழை மடத்தில் சைவச் சிறுமியர் சிறுவரோடு**
**ஆயிழையாரும் கூட்டுப்பிரார்த்தனை அமையச்செய்வர்" (திண்ணபுரச்சருக்கம்:49)**

**அந்தணர் ஒழுக்கம்**

இந்து சமுதாயத்தில் அந்தணர்கள் செல்வாக்கு குறிப்பிடத்தக்கதாகும். காரையூர் அந்தணர்கள் மக்களுக்கு அறிவுரைகளைக் கூறுபவர்களாகவும் நல்லொழுக்கங்களைகடைப்பிடித்து ஒழுகுபவர்களாகவும்சிவனது திருவடிகளின்றி வேறு எதிலும் ஆசை வைக்காதவர்களாகவும் விளங்குகின்றனர் என்பதனை ஈழத்துச் சிதம்பர புராணம்,

**" அறிவுரையால் சீலத்தால் சிவநெறியைக்**
**காத்து வரும் அந்தண் வாழ்க்கை...." (காரைவளச்சருக்கம்:144)**
**" அண்ணல் சேவடியன்றி வேறு ஆசை இல்..." (திண்ணபுரச்சருக்கம்:77)**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிரு காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR

**" நேயம்மிக்கவா் நன்னெறியில் நின்றவா்..." (அந்தணா் பூசைபுரி சருக்கம்:01)**

என்ற பாடலடிகளால் எடுத்தியம்பியுள்ளது.

**மகளிர் ஒழுக்கம்**

ஒரு பெண் ஒழுக்கம் தவறாது வாழ்ந்தால் அது அவளுக்கும் அவள்சார்ந்த சமூகத்திற்கும் மேன்மையைத் தரக்கூடிய செயலாக அமையும். கார்மேகம் கலந்தவறாது மழையைப் பொழிவது போல காரைநகரிலுள்ள பலுகாடு, கருங்காலி எனும் இடங்களில் வாழும் மகளிரது கற்பொழுக்கம் சிறந்து விளங்கும் என்பதனை,

**" ...கார் இலக்கும் படி மடவார் கற்பு இலங்கும்..." (காரைவளச்சருக்கம்:112)**

என திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் மனைவி கணவனுக்கு செய்யும் பெருங் கடமை கற்புடையவளாக இருத்தலே எனும் விழுமியச் சிந்தனை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மனைவியானவள் கணவனின் வரவுக்கேற்ப வீட்டுச் செலவுகளை செய்தும் கணவனின் நீண்ட ஆயுளுக்காக விரதங்களை அனுஷ்டித்தும் கணவன் கட்டளையிடும் முன்பு குறிப்பினாலே கருதியதை அறிந்து அக்கருத்தின் வழி நடந்தும், கணவன் பணியிலே எக்காலமும் கருத்துடையவராய் நின்று ஒழுகி, அவ்வூரிலுள்ளோர் பாராட்டுமளவிற்கு இனிது வாழ்ந்தார்கள்.

**" நாயகன் வரவுக்கேற்பச் செலவுகள் நாடிச் செய்தும்**
**நாயகன் வாழ் நாள் ஓங்க நோன்புகள் நயந்து கொண்டும்..."**
**(திண்ணபுரச் சருக்கம்:65)**

**ஆடவர் மாண்பு**

ஆடவா் சிறப்பு யாதெனில் சமூகத்தோருக்கு தானதர்மம் செய்தலாகும். தரும சாஸ்திரங்களிற் கூறப்பட்டதற்கிணங்க பஞ்ச யக்ஞும் செய்து, சிறந்த அறத்தினைப் பேணி வாழ்வார்களாக காரைநகா் ஆடவா்கள் திகழ்ந்தாா்கள்.

**" அறந்தரு நூல்கள் சொன்ன ஐம்புலத்து ஆறும் பேணி" (திண்ணபுரச் சருக்கம்:62)**

**அன்பு**

சமூக விழுமியப் பண்புகளில்தலையாயது பிற உயிா்களிடத்து அன்பு செலுத்துவதாகும்.' அன்பே சிவம்' என்பது சைவ சமயத்தின் சிறப்பாகும்.இச்சிந்தனையை ஈழத்துச்சிதம்பர புராணத்தில் காண முடிகின்றது.

**" அன்பு என்னும் பெரும் பண்பால் அறம் வளா்க்கும்**
**மக்கள் அங்கே அளவிலாதாா்....." (திண்ணபுரச் சருக்கம்:40)**

அன்பு எனும் உயிர் விழுமியக் குணத்தினால், தர்மத்தை வளரச் செய்யும் நன்னெறியைக் கடைப்பிடித்து வாழும் மாந்தர் திண்ணபுரத்தில் அதிகளவாக இருக்கின்றார்கள்.

**இன்சொல்**

ஒருவரது மனதினைப் புண்படுத்தாமல் இன் சொல் பேசுதல் குறிப்பிடத்தக்க சமூக விழுமியப் பண்பாகும். காரையூா் நெய்தல் நில மகளிர் கரும்பைக் காய்ச்சி எடுத்த கற்கண்டு போன்ற கனிந்த இனிய பேச்சை உடையவர்களாக விளங்கினார் என்கிறது இப்புராணம்.

**" ....கரும்பு அடுகட்டியில் கனிந்த மென்மொழி" (காரைவளச்சருக்கம்:90)**

**நீதி**

கல்வியறிவுடன் எல்லா மாந்தரும் நீதி நெறியை கடைப்பிடித்து ஒற்றுமையாக வாழ்வார்கள் என்தனை,

**" ..நேர்மை நெறி கடைப்பிடிப்பா் நிகர் ஒன்று இன்றி ஒன்றுபட்டு வாழ்ந்திடுவா்..."**

**(காரைவளச்சருக்கம்:110)**

இப்பாடலடியால் ஈழத்துச் சிதம்பர புராணம் குறிப்பட்டுள்ளது. இங்கு நீதி என்பது நியாயம், ஒழுக்கம், மெய், முறைமை, உலகத்தோடு பொருந்துகை, இயல்பு போன்ற பொருள்களைச் சுட்டுவதாக அமையும்.

**சத்தியம்**

தர்மத்தின் (தா்மம் எனும் சொல் நற்செயல், ஒழுக்கம்,கடமை, நீதி, தானம், அறம் என பொருள்படும்) முக்கிய அம்சமாகிய சத்தியம் பற்றி இப்புராணம் செப்புகிறது. காரைநகர் மக்கள் வாளினாலே இறப்பதற்குரிய துன்பம் வந்தாலும் தமது சத்தியம் தவறமாட்டார்கள்.

**" ..வாளினால் மடியும் இன்னல் வாரினும் தம் வாய்மை**
**குன்றார்..." (காரைவளச்சருக்கம்:16)**

**தன்மானம் பேணல்**

சமுதாய விழுமியங்களுடன் இயைந்து வாழ நினைப்பவர்கள் எச்சூழ் நிலையிலும் தம் ஒழுக்கம் தவறாது தன்மானம் காத்து வாழ்வார்கள். தன் மானம் பேணும் பெரியோர்கள் வாழ்வதனாலேயே இவ்வுலகில் ஆண்மை குணம் நிலைபெற்றுள்ளது. ஒரு மயிர் ஒடிந்து விழுமாயினும் உயிரை நீக்கிக் கொள்ளும் கவரிமானை போல தமது மானம் அழிய நேருமாயின் உயிரையே போக்கக்கூடிய உயர் குணத்தினர் உள்ள ஊர் காரையூர்.

**" மயிரை நீப் பின் உயிா் நீக்கும் மானக் கவரி மானே போல்**
**உயிரை நீக்கும் உயா் குணத்தால்.."**

**(ஐய்யனார் கோயில்காண் சருக்கம்:62)**

**கொடை**

'தர்மம் தலைகாக்கும்' என்ற சான்றோர் வாக்குக்கிணங்க தருமத்தின் முக்கிய அங்கமாக விளங்கும் கொடை பற்றி ஈழத்துச்சிதம்பர புராணம் எடுத்தியம்பியுள்ளது. தானம் ஒரு சமூகம் சார்ந்த கடமையாக உள்ளது. கொடுப்பவனை மனிதப் பண்பு உடையவனாகச் செய்வதுடன் பெறுபவனை பொருளியல் சார்ந்த நன்மைகளை பெறச் செய்யும் ஒரு சமூக விழுமியப் பண்பாகத் தானம் விளங்குகிறது.

**" ....இவறு ஓங்காப் பெருஞ் செல்வா் இறை பணிக்கே**
**ஏன்ற பொருள் ஈந்ததாலே"**

**(திருக்கோயிற் பாதுகாவலா் சருக்கம்:11)**

உலோப குணத்தை மேலோங்கவிடாது ஈதலையே தமது சிறந்த குணமாகப் போற்றிப் பாதுகாப்பவா்களாக காரையூா் செல்வந்தா்கள் விளங்கினாா்.

**நன்றி மறவாமை**

'நன்றி மறப்பது நன்றன்று' எனும் வாசகத்திற்கிணங்க, சிவனுக்கும் உமையம்மைக்கும் இடையே ஏற்பட்ட ஊடலை தீா்ப்பதற்கு சுந்தரா் தூதராகச் சென்றதனை ஈழத்துச்சிதம்பர புராணம் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளது.

**" ..சுந்தரா் தம்பிரான் தோழா் நன்றி நடை பயில்கின்றாா் தோழிமாரே.."**

**(விழாவயா்சருக்கம்:45)**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

**நடுவுநிலைமை**

தற்கால சமுதாயத்தில் மிகவும் வேண்டப்படும் மனித விழுமியப்பண்பாக விளங்குவது நடுவு நிலமையாகும்.காரையூர் வலந்தலையிலுள்ள மக்கள் பிணக்குகளை விரும்பாது வழக்குரைக்க நீதிமன்றம் ஏறாதவராய் நடுவுநிலைமை குன்றாதவராய் ஒற்றுமையாய் ஒன்றுபட்டு வாழ்பவர்.

**" வாது செயநாடாதார் வழக்கு உரைக்க**
**நீதி மன்றம் ஏறாதார் நேர்மை இறங்காதரா் பேதம் இன்றி வாழ்வார்.."**

**(காரைவளச்சருக்கம்:96)** தங்கோடையிலும் கோவளத்திலும் வாழும் மக்களிடத்தில் நடுவுநிலைமை சிறந்து விளங்குகின்றது.

**" திருவோங்கும் தங்கோடை கோவளத்தில் வாழ்வோர் பால் செம்மை ஓங்கும்"**

**(காரைவளச் சருக்கம்:109)**

என சமூக விழுமியப் பண்புகளில் முக்கியமானதாகக் கருதப்படும் நடுவுநிலைமை பேணல் பற்றியும் இப்புராணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பஞ்சமாபாதங்கள்**

கொலை, களவு, பொய், மது, மாது போன்ற சமூக விரோதச் செயல்கள் பஞ்சமாபாதங்கள் எனப்படுகின்றன. ஆனால் காரையூர் மாந்தர் இவை தவிர்த்து ஒழுக்க சீலர்களாக வாழ்ந்துள்ளனர். வலந்தலையில் வாழும் மாந்தர் களவு செய்தலை அறிய மாட்டார்கள், பொய் சொல்ல மாட்டார்கள், அயலவர்களைப் பற்றிய ரகசியங்களை உபாயமாக நுணுகியறியார், எல்லோருக்கும் உதவி செய்து வாழ்வார் என்கிறது இப்புராணம்.

**" ....களவு அறியாா் பொய் சொல்லாா்...**
**உளவு அறியாா் பழுமரம் போல் உதவிடுவர்....."**

**(காரைவளச்சருக்கம்:113)**

**" வஞ்சகம் களவு பொய்ம்மை ஆதிய மரங்கள் சாடித்..." (காரைவளச்சருக்கம்:116)**

என வஞ்சகம்,களவு,பொய் ஆகிய பெரிய மரங்களை முறித்தெறிந்து நன்னெறியில் வாழ வேண்டும் என்கிறது.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்(கர்வம்), மாற்சரியம்(பொறாமை) ஆகிய ஆறும் மனிதரில் காணப்படும் உட்ப்பகைகளாகும். இவை ஆறும் மனதினுள் மறைந்து கிடந்து நினைத்தவுடனேயே வெளிப்பட்டு மாந்தர்களுக்கு தீங்கிழைக்கக் கூடியவை.

**" ..எண்ண வரும் உட்பகைவா் எல்வோரும் புறம் ஒதுங்க..." (தவம்புரிசருக்கம்:17)**

**நாவலர் ஒழுகலாறு**

ஈழத்துச் சிதம்பர புராணம் காரைநாட்டு மாந்தர்கள் சைவத்தையும் தமிழையும் கண்ணாக காத்து வந்த நாவலர் வகுத்த நன்னெறியில் (நாவலர் ஒழுகலாறு) ஒழுகி வருகின்றனர்.ஆகையால் அவர்கள் மனதில் அவ்வொழுக்க நெறி செவ்வையாகப் பதிந்து கொண்டது என்கிறது.

**" நாவலன் ஒழுகலாறு மற்றதனோடு நல்லோர்**
**மேவிடும் வீடு நல்கு....." (காரைவளச்சருக்கம்:120)**

நாவலர் காட்டிய நன்னெறியைக் கடைப்பிடித்தொழுக அன்பு,அருள்,அடக்கம்,பொறை, ஒப்புரவு,ஈகை,வாய்மை, புலால் உண்ணாமை, கள்ளாமை, வெகுளாமை, அழுக்காறாமை, கொல்லாமை, வெ·.காமை, புறங்கூறாமைமுதலிய விழுமியப் பண்புகள் எல்லாம் செம்மையாக அமையும் எனவும் செப்பியுள்ளது.

**" மெய்வகைச் சீலம் என்னும் விழுத்தகு சோலை பூப்பத்...."**

**(காரைவளச்சருக்கம்:117)**


© 2024, IRJTSR 

**முடிவுரை**

இந்து சமுதாயத்தில் பண்பாட்டு விழுமியங்களின் கையளிப்பும் பண்பாட்டுமயமாக்கலும் திருக்கோயில்களை மையமாகக் கொண்டே இடம்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.ஈழத்தில் அமையப் பெற்றுள்ள சிவாலயமாகிய ஈழத்துச் சிதம்பரம் மீது 20ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற சமய இலக்கியமாக ஈழத்துச் சிதம்பர புராணம் விளங்குகிறது. இப்புராணம் வெறுமனே சமய பக்தி இலக்கியம் என்பதனைத் தாண்டி சமூக பண்பாட்டு மேம்பாட்டுச் சிந்தனைகளைபுலப்படுத்துகின்ற இலக்கியமாகவும்திகழ்கின்றமைசுட்டிக்காட்டத்தக்கதாகும்.

## உசாத்துணைகள்

[1] இளமுருகனார், சோ., வைத்தீசுவரக்குருக்கள்,க., (ப.ஆ.),(1972),ஈழத்துச் சிதம்பரபுராணம்,ஈழத்துச் சிதம்பர தேவத்தானம், காரைநகர்.

[2] இளநிலைக் கல்வியியல், சிறப்புக்கல்வி (B.Ed.Spl.Ed) பருவம்-1,SED-12, சமகால இந்தியாவில் கல்வி,சிறப்புக்கல்வி மற்றும் மறுவாழ்வுப்புலம் தமிழ்நாடு திறந்த மற்றும் மறுவாழ்வுப்புலம் தமிழ்நாடு திறந்த பல்கலைக்கழம், சென்னை.

[3] சிவலிங்கராஜா,எஸ்.,(2009),ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு- சென்னை.

[4] சுகந்தினி, சி.,(2020), இலங்கை சைவத் தலபுராணங்கள் ஒரு பண்பாட்டியல் ஆய்வு, கரிகணன் நிறுவனம், யாழ்ப்பாணம் , இலங்கை.

[5] சோமசுந்தரம். கு., (1995). மனித விழுமியங்கள். ரஜி வெளியீடு. கொழும்பு.

[6] …………, (2010). மனித வாழ்க்கை விழுமியங்கள். ரஜி வெளியீடு, தெகிவளை.

[7] பக்த வற்சல பாரதி, 2003, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

[8] பிலேந்திரன். ஞா., (1996). விழுமியக்கல்வி. கிறிஸ்தவ மன்றம். யாழ்-பல்கலைக்கழகம்.